# பம்மல் நகராட்சி

## காஞ்சிபுரம் மாவட்டம்

ந.க.எண். 16/2010 நாள்: 28–07–2010

## மறுஒப்பந்தப்புள்ளி அறிக்கை

**(மூன்றாம் அழைப்பு)**

**1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படுகிறது.**

பம்மல் நகராட்சியின் சார்பாக செயல் அலுவலர் அவர்களால் பொது நிதியின் கீழ் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட பணியினை செய்து முடிக்க மோட்டார் வாகன இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறன்றன. அங்கீகாரம்/பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 13.08.2010 தேதி **வெள்ளிக் கிழமை** பிற்பகல் 3.00 மணிவரை (அலுவலக கடிகார நேரத்தின்படி) செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும்.

பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இந்நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் 12.08.2010 அன்று மதியம் 3.00 மணி வரை உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பணி தொடர்பான இதர விவரங்களை நகராட்சி பொறியியல் பிரிவிலோ அல்லது http://www.tenders.tn.gov.in என்ற இணையத்தளத்தின் மூலமும் தெரிந்து கொள்ளலாம்.

## ஒப்பந்தப்புள்ளி கோரும் பணியின் விவரம்

| வ. எண் | பணிகளின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி படிவ விலை ரூ. | காப்புறுதி தொகை 1 % ரூ | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | நகராட்சி சொந்தமான பொது சுகாதாரம் வண்டி எண். TN22 – AD-0504 கழிவுநீர் அகற்றும் வாகனத்தை பழுதுநீக்கி, வர்ணம் தீட்டி புதுப்பித்து வட்டார போக்குவரத்து தகுதி சான்று பெற்று தருதல் | 336/– | 2000/– | 15 நாட்கள் |
| 2. | நகராட்சி சொந்தமான குடிநீர் வண்டி எண். TN22 – AP-5728 வாகனத்தை பழுதுநீக்கி, வர்ணம் தீட்டி புதுப்பித்து வட்டார போக்குவரத்து தகுதி சான்று பெற்று தருதல் | 169/– | 850/– | 15 நாட்கள் |
| 3. | நகராட்சி சொந்தமான குடிநீர் வண்டி எண். TN22 – M-4029 வாகனத்தை பழுதுநீக்கி, வர்ணம் தீட்டி புதுப்பித்து வட்டார போக்குவரத்து தகுதி சான்று பெற்று தருதல் | 336/– | 1800/– | 15 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 2000 படி ஒப்பந்தபுள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
2. ஒப்பந்ததாரர்கள் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளிகள் அடஙகிய படிவத்தில் விலைப்புள்ளிகள் குறித்து மேற்படி வேலைக்கான மதிப்பீட்டின்படி 1% விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தப்பட்டு அதற்கான ரசீது இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் நகராட்சி அலுவலகத்தில் வழஙகப்படும் மாதிரி படிவத்தில் பணி உத்தரவு பெறும் போது ரூ. 20/– மதிப்புள்ள அரசு முத்திரை தாளில் நகரராட்சியுடன் ஒப்பந்தம் செய்துக் கொள்ள வேண்டும்.
4. இதர நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்
5. வாகனஙகளை பழுது நீக்கி வண்ணம் தீட்டி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் தகுதி சான்று பெற்று வழஙகி பின்பு பட்டியல் தொகை வழஙகப்படும்.
6. சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டஙகளிலுள்ள மோட்டார் வாகன இயக்குநரால் அஙகீகரிக்கப்பட்ட நிறுவனஙகளிடமிருந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்

செயல் அலுவலா்
பம்மல் நகராட்சி
பம்மல், சென்னை – 75

பெறுநா்:

1. அஙகீகாரம் பெற்ற நிறுவனஙகள்.
2. நகர மன்ற தலைவா், துணைத் தலைவா் மற்றும் அனைத்து உறுப்பினா்கள், பம்மல் மூன்றாம் நிலை நகராட்சி.
3. அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய
4. செயல் அலுவலா், அனகாபுத்தூா், புழுதிவாக்கம், மறைமலைநகா், வளசரவாக்கம் நகராட்சிகளின் – அலுவலக விளம்பர பலகைக்கு.

நகல்:

1. நகராட்சிகள் நிா்வாக இயக்குநா், எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 5 அவா்களின் தகவலுக்கு பணிந்து சமா்பிக்கப்படுகிறது.
2. மண்டல நகராட்சிகள் நிா்வாக இயக்குநா், செஙகல்பட்டு மண்டலம். அவா்களின் தகவலுக்கு பணிந்து சமா்பிக்கப்படுகிறது.